# ராணுவத்திற்கு இந்திய ராணுவ அதிகாரி ஆலோசனை

ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு இந்திய இராணுவ ஆலோசனையும் கிடைக்கின்றதா? இது குறித்து கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்று வெளியிட்ட செய்தி இதை ஊர்ஜிதப்படுத்துவதுபோன்று உள்ளது. இந்திய இராணுவத்தின் விஞ்ஞானப் பகுதி ஆய்வகத்தின் தலைவர் தற்போது கொழும்பில் தங்கியுள்ளதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய இராணுவ விஞ்ஞான ஆய்வகப் பிரிவின் தலைவரான கேர்ணல் கல்ஜித் சிங் என்பவர் தற்போது கொழும்பில் பல மாநாடுகளை நடாத்தி வருவதாகவும், ஸ்ரீலங்கா இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசனை செய்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கேர்ணல் கல்ஜித் சிங் சில தினங்களுக்கு முன் கொழும்பில் பாதுகாப்பு மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது, '' இந்திய இராணுவம் உள்நாட்டுத் தீவிரவாதிகளானாலும் வெளிநாட்டுத் தீவிரவாதிகளானாலும் ஒரே மாதிரியான நிலைப்பாட்டையே கொண்டிருக்கும் — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 5 - 00

முரசொலி

முரசு 05 ஒலி 266 பிரசோற்பத்தி ஆவணி 05 ( 21 · 08 · 1991 ) புதன்

# சிவராஜன், சுபா உட்பட எழுவர் சயனைட் அருந்தி தற்கொலை

## பரா இராணுவம் நுழைந்த போது கைகோர்த்த நிலையில் சடலங்கள்!

**ராஜீவின் 47 ஆவது பிறந்த நாளான நேற்று அவரின் கொலையில் முக்கிய சந்தேக நபர்களாக தேடப்பட்டு வந்த சிவராஜனும், சுபாவும் தற்கொலை செய்து கொண்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது**

பங்களூரில் புறநகர் பகுதி வீடொன்றில் சிவராஜன், சுபா உட்பட ஏழு பேர் தங்கியிருந்ததாக தகவல் கிடைத்ததாகவும், வீட்டை பொலிஸார் முற்றுகையிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் வீட்டினுள் நுழைய முயன்ற போது வீட்டிலிருந்து துப்பாக்கி சூடு நடாத்தப்பட்டது இதனால் 4 பொலிஸார் காயமடைந்தனர்.

இதைத் தொடர்ந்து தமது முயற்சியை கைவிட்ட பொலிஸார் வீட்டைத் தொடர்ந்து முற்றுகையில் வைத்திருந்தவாறே இந்திய பரா இராணுவத்தின் உதவியை நாடினர்.

நேற்றுக்காலை 6 மணியளவில் அப்பகுதிக்குவந்த பரா இராணுவத்தினர் அவ்வீட்டின் கூரைப்பகுதியால் ஏறி உள்ளே நுழைய முயன்றனர் அப்போது வீட்டினுள் சில துப்பாக்கி வேட்டுகள் கேட்டன.

தொடர்ந்து பரா இராணு —04 ஆம் பக்கம் பார்க்க

## கொலை விசாரணையில் சி. பி. ஐ பின்னடைவு!

சிவராஜனும், சுபாவும் தற்கொலை செய்து கொண்டுள்ளதால் ராஜீவ்காந்தி கொலை விசாரணையில பலத்த பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக இந்திய மத்திய புலனாய்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இத்தற்கொலை சம்பவங்களினால் விசாரணையோ அல்லது கைது செய்யும் படலமோ நின்று விடப் போவதில்லை எனவும் சி. பி. ஐ தெரிவித்தது.

## உயிருடன் பிடித்திருக்கலாமே பாராளுமன்றத்தில் அங்கலாய்ப்பு

ராஜீவ் கொலையின் சந்தேக நபர்களான சிவராஜனையும் சுபாவையும் உயிருடன் பிடித்திருந்தால் பல தகவல்களை பெற்றிருக்கலாமே என நேற்று இந்திய பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் தெரிவித்தனராம்

கொலையாளி சிவராஜன் என்றுமே உயிருடன் சிக்க மாட்டார் என இந்தியாவில் பல பத்திரிகைகளும் இதுவரை ஆருடம் தெரிவித்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதே வேளை உலக குற்றவியல் வரலாற்றில் அரசியல் — 04 ஆம் பக்கம் பார்க்க

## வானொலி மூலமே அறிந்ததாக இந்தியத் தூதுவர்!

சிவராஜன் தற்கொலை செய்து விட்டதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து இலங்கை வெளியுறவு அமைச்சு கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்துடன் தொடர்பு கொண்டது

இது குறித்து இந்திய தூதுவர் கருத்து வெளியிட்ட போது, தாமும் அகில இந்திய வானொலி மூலமே செய்தியை அறிந்து கொண்டதாகவும் மேலதிக விவரங்கள் ஏதும் தமக்குத் தெரியாது எனவும் சொன்னார்.

மீண்டும் அரசு கூறுகிறது

## பிரட்மன் சமரஸ பேச்சுக்கு லண்டன் செல்லவில்லை

பிரட்மன் வீரக்கோன் லண்டனில் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடாத்த செல்லவில்லை என மீண்டும் பிரதமர் டி. பி. விஜேதுங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

புலிகளினால் சிறைவைக்கப்பட்டுள்ள பொலிஸாரையும், இராணுவத்தினரையும் மீட்க அரசு சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் உதவியை நாடியுள்ளதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

## சைக்கிள் திருட்டை ஒழிக்க புதிய திட்டம் அமுலாகிறது

யாழ் பல்கலைக் கழகத்தில் சைக்கிள் திருட்டை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கூட்டம் நேற்று முன் தினம் இங்கு நடைபெற்றது.

கடந்த எட்டு மாதங்களில் 18 சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன. இவற்றுள் 8 —04 ஆம் பக்கம் பார்க்க

பி.பி.ஸி. தகவல்

## ஆனையிறவு முகாமிலிருந்து படையினர் குறைக்கப்படுகின்றனர்

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து தமது படையணிகள் திருப்பி அழைக்கப்படுவதாக ஸ்ரீலங்கா இராணுவம் தெரிவித்துள்ளது.

முகாமிலிருந்து ஆயிரக்கணக்கான படையினர் திரும்புவதாக அதிகாரிகளை மேற்கோள்காட்டி பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

எனினும் முகாமில்சிறிதளவு படையினர் இருப்பர் எனவும், முகாமைச் சூழ விமானத் தாக்குதல் தொடரும் எனவும் அதிகாரிகள் கூறியதாக பி.பி.ஸி.மேலும் தெரிவித்தது

இதேவேளை நேற்று ஆனையிறவு முகாம்குறித்த செய்திப் படங்களை ரூபவாஹினி ஒளிபரப்பியது படையினர் தமது நடவடிக்கைகளை முகாம் பகுதியில் எவ்வாறு நடாத்தினர் என செய்தியாளர்களுக்கு விளக்குவதாக அவ் ஒளிபரப்பு அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### போர்த்துளி...

### அழைப்பு!

மாவிடித்து
பிட்டவித்து
மணவாளன்
தாள் பிடித்தல்
தானுன் வாழ்வா?
துப்பாக்கி தூக்கி
வேட்டுத் தீர்த்து
விடியலுக்குத்
தோள் கொடுக்க
விருப்பமா, வா!

—ஸ்ரீ குமரன்

## புலிகளின் தாக்குதலில் ஊர்காவற்படை காயம்

வவுனியா மாமடுக் காட்டுப் பகுதிக்குள் வேட்டைக்குச் சென்ற மூன்று ஊர்காவல் படையினரைப் பெண் போராளிகள் தாக்கியதால் இருவர் காயமடைந்தனர், ஒருவரைக் காணவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இத் தாக்குதலில் காயமடைந்த பண்டார, ஆனந்த என்ற இருவரும் அனுராதபுரம் வைத்தியசாலையில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காணாமல் போனவர் தென்னிகோன் (32) எனத் தெரியவருகிறது.

80

★ ஆனையிறவுப் போரில்

# பெண் போராளிகளின் தீரம் உலகின் கவனத்தை ஈர்த்தது

- ஆர்த்தி

இன்று உலகமெங்கும் பெண்கள் விடுதலை பெற வேண்டும் என்ற முழக்கம் வலுப் பெற்று இருந்தாலும் பெண்களுக்கான சமூக அடக்குமுறையை உடைத்தெறிவதற்கான செயல் வடிவில் துணிந்து இறங்கி உலக நாடுகளின் பார்வையை எமது பக்கம் ஈர்த்துக் கொண்டிருப்பவர்கள் எமது பெண் போராளிகள்.

இதுவரை காலமும் நிகழ்ந்த சண்டையிலே பெண்களின் பங்களிப்பு பெரும்பான்மையாக இருந்தாலும் பெரியதொரு பிரச்சார வடிவம் பெறாமல் இலைமறை காயாகவே இருந்தது. ஆனால் இன்று ஆனையிறவு யுத்தக் களத்திலே களமாடி வீரமரணம் அடைந்த காயமடைந்த தொடர்ந்தும் தாக்குதலுக்குத் தயார் நிலையில் உள்ள எமது பெண் போராளிகளின் தீரம் உலக அரங்கின் கவனத்தை முழுமையாக ஈர்த்துள்ளது. பெண்கள் சமூக அடக்குமுறையில் இருந்து விடுபடுதல் என்ற வகையில் உலகப் பெண்களுக்கு ஒரு முன் உதாரணமாகத் திகழப்போகின்றவர்கள் எமது தமிழீழப் பெண்கள்தான் என்பதை எம்மால் இப்பொழுதே உணர முடிகின்றது.

ஒரு காலத்தில் பெண்கள் மென்மையானவர்கள் அவர்களால் கடின வேலைகள் செய்ய இயலாது என்ற மனப்பான்மையும் இவர்களுக்குக் கல்வி தேவை இல்லை என்ற சிந்தனையும் மக்கள் அனைவரிடமும் ஊறிக்கிடந்தது. இன்று காலத்தின் தேவை காரணமாக பெண்களுக்கான கல்வியும் வேலை வாய்ப்பும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருந்தாலும் இவர்கள் மென்மையானவர்கள் என்ற கருத்து இன்னும் நிலவுகின்றது. அந்த சிந்தனையைத் தகர்த்து சமூக விடுதலையைப் பெற வேண்டுமானால் எமது இன அடக்குமுறை ஒடுக்கப்பட்டு சுதந்திர தாயகம் பெறப்பட வேண்டும் என்ற சிந்தனையைச் செயல் வடிவம் ஆக்கினார்கள் எமது பெண் போராளிகள்.

இன்று ஆண் பெண் வயது பேதங்கள் இன்றி நாம் அனைவரும் ஆயுதம் ஏந்த வேண்டும் காலத்தின் தேவை ஒன்று எழுந்துள்ளது. நான் எனது குடும்பம் எனது வீடு என்பன காப்பாற்றப்பட வேண்டும் என்று சொன்னால் எமது மண் காப்பாற்றப்பட வேண்டும், 800000 மக்கள் வாழ்கின்ற இந்த யாழ் குடா நாட்டில் இருந்து குறைந்தது 50000 பேர் ஆயுதம் ஏந்தினால் நாம் இந்த மரபுவழி யுத்தத்தில் விரைந்து வெற்றியைப் பெற முடியும். எமது எல்லைகளை மீட்டு எடுக்க முடியும் சோழர் காலத்தின் பின் இன்று தான் தமிழர்களுக்கு மீண்டும் ஒரு பொற்காலம் பிறந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது. எமக்குக் கிடைக்கின்ற பெறுமதி மிக்க காலத்தை உருவாக்கிய தலைவனின் கீழ் எமது விடுதலையை வென்றெடுப்பதற்காக மரணவாயிலில் போராடும் எமது மழலைகளின் கரங்களை வலுப்படுத்த அனைவரும் அணி திரள வேண்டும்.

## பத்து இளம் ஆசிரியர்க்கு ஜப்பான் அழைப்பு

இலங்கையிலிருந்து பத்து இளம் ஆசிரியர்களுக்கு ஜப்பான் அரசாங்கம் அழைப்பு விடுத்திருக்கிறது இவ் அழைப்பு இலங்கை உட்பட ஏழு தெற்காசிய நாடுகளுக்கு விடுக்கப்பட்டுள்ளது

ஜப்பானில் ஐப்பசி மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் கார்த்திகை 12 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் ஜப்பான் தெற்காசிய இளைஞர் நட்புறவு நிகழ்ச்சிக்கு இப் பத்து இளம் ஆசிரியர்களும் இலங்கையின் சார்பில் கலந்துகொள்வர்.

### கடற்படை ரோந்து

பருத்தித்துறை கடற்பிராந்தியத்தில் கடற்படையினரின் ரோந்து இரு தினங்களாக அதிகரித்திருப்பதாக அப்பகுதிமக்கள்தெரிவித்தனர் 08

## டொனால்ட் வெற்றிக் கிண்ண அரை இறுதிப் போட்டிகள்

சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் டொனால்ட் வெற்றிக் கிண்ணத்திற்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் அரை இறுதி ஆட்டங்களை அண்மித்து விட்டன

எதிர்வரும் வார இறுதியில் நடைபெறவுள்ள அரை இறுதிப் போட்டிகளில் 24 ஆம் திகதிப் போட்டியில் ஜொணியன்சை எதிர்த்து சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகமும், 25 ஆம் திகதிப் போட்டியில் மானிப்பாய் பாரிஸ் அணி கிறாஸ்கொப்பேஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆடவுள்ளதாக கிரிக்கெட் விளையாட்டுத் துறைச் செயலாளர் திரு எஸ். விமலராசன் தெரிவித்தார். (16)

## மக்கள்மயப்படுத்தும் திட்டம்; வங்கி ஊழியர் சங்கம் எதிர்ப்பு!

இலங்கைக்குக் கடன் வழங்கும் சில அமைப்புக்களின் ஆலோசனைக்கு ஏற்பவே இங்குள்ள தனியார் வங்கிகளை மக்கள்மயப்படுத்த அரசு முனைவதாக 20 ஆயிரம் அங்கத்தவர்களைக் கொண்ட இலங்கை வங்கி ஊழியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

சென்ற வருடம் இதே ஆலோசனைக்கு ஏற்ப ஆர்ஜன்டீனாவிலுள்ள சில வங்கிகளை அந்நாட்டு அரசு மக்கள் மயப்படுத்த முனைந்ததைச் சுட்டிக்காட்டியுள்ள இச் சங்கம் இவ்வாறான மாற்றங்கள் செய்யப்படுமுன் வங்கிகளின் தொழிற்சங்கங்களின் விருப்பமும் அறியப்படல் வேண்டுமெனவும் இலங்கை கேட்டுள்ளது. (16)

## வேலையற்ற நாள்களில் பணிபுரிந்த பல்கலைஊழியர்க்குஊக்குவிப்புப்படி

யாழ் பல்கலைக் கழகப் பேரவை கடந்த மாதமும், இம்மாதமும் விடுமுறையில்லாத-வேலையற்ற நாள்களில் வேலை செய்த ஊழியர்களுக்கு சம்பளத்தில் 50 வீதத்தை ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட நாள்களில் பல்கலைக் கழகத்தில் எந்தவித இடையூறுகளுமின்றி வேலைகள், விரிவுரைகள், ஆய்வுகள் சாதாரண நாள்கள் போல் நடந்தமை தெரிந்ததே. (05)

## சிறு விளம்பரம்

### புத்தகம்

டாக்டர் எம். கே. முருகானந்தன் எழுதிய (1) எயிட்ஸ் (2) போதையைத்தவிருங்கள் மருத்துவ நூல்கள் விற்பனைக்கு வந்துள்ளன. உயர் கல்வி மாணவர்கள் சுகாதார சேவையாளர்கள், சமூகசேவையாளர்களுக்கு மிகவும் உதவக்கூடியன. பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். 08112

### ஜோதிடம்

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகம் நடவாமை, சாப தோஷங்கள் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ சாதகத்துடன் நேரில் வரவும். சாந்திபரிகாரங்கள் கூறுவதுடன் யந்திரங்களும் வழங்குகின்றோம். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம் 146, பருத்தித்துறை வீதி, அரசடிச்சந்தி, நல்லூர். 08073

### சேவை

பாஸ்போட் - அடையாள அட்டை எல்லாஜ்மென்ட் கலர்படங்களுக்கும். றபர் சீல். பிளாஸ்ரிக் விளம்பர போட் எழுதுவதற்கும், புளக் டிசைன்களுக்கும் ஸ்ரிக்கர் வேலைகளுக்கும் தரன் படப்பிடிப்பாளர், 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 08007

## பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவில் உலர் உணவு விநியோகம்

வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ள அகதிகளுக்கு உலர் உணவு விநியோகம் வழங்கப்படுகிறது.

பருத்தித்துறை, புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இவ் அகதிகளுக்கு 10ஆம், 11ஆம், 12ஆம் கட்ட உலர் உணவு வழங்கப்படுகிறது.

இதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார். (08)


ஓம்
கணபதி

### சப்பற வெள்ளோட்டம்

திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பசோதி
தேவரதசிற்பமணி சு. இராசரத்தினம் அவர்களது

விநாயகா சிற்பாலயத்தினரின்
கைவண்ணத்தால் உருவாக்கப்பட்ட

மூன்றாவது
சப்பற வெள்ளோட்ட விழா

22 - 08 - 91 வியாழனன்று காலை 8. 15மணியளவில்

கொக்குவில் மேற்கு
அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் நடைபெறும்

அத்தருணத்தில் தமிழ்ஈழத்தின் தலைசிறந்த கவின்கலைஞர்களும் சமயப்பெரியோர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். முருகனடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இச்சிற்பசோதி அவர்களினது விநாயகா சிற்பாலயத்தினர் முதலாவதாக இணுவில் கந்தசுவாமி கோவில் சப்பறத்தையும்,

இரண்டாவதாக திருநெல்வேலி தலங்காவில் பிள்ளையார் கோவில் சப்பறத்தையும் உருவாக்கியளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

விநாயகா சிற்பாலயம்
திருநெல்வேலி மேற்கு
யாழ்ப்பாணம்
08117



தென்னிந்திய திருச்சபை
யாழ் அத்தியட்சாதீனம் பண்டத்தரிப்பு

### சிறு கைத்தொழில் பயிற்சி நிலையம்

பயிற்சி வகுப்புகள் புரட்டாசி மாதம் 2ஆம் திகதி, திருச்சபை பயிற்சி மண்டபத்தில் நடைபெறும். 17 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் யாவரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவங்களை, பண்டத்தரிப்பு வை எம். சி. ஏ. யில் காலை 9 மணி முதல் மாலை 1 மணி வரை பெற்றுக்கொள்ளலாம் விண்ணப்ப முடிவுத் திகதி 28 - 9 - 91க்கு முன் எமக்கு விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்கவும்.

விண்ணப்பப்படிவம் விலை ரூபா 5/-

ஊழியர் குருமனை
பண்டத்தரிப்பு

ஊழியர்
பண்டத்தரிப்பு திருச்சபை
08118

## துன்பத்தில்சிரித்தல் என்றும்நன்று

எழுத்தாளர் கல்கி சிறையில் இருந்தபோது, அவரது காலில் இரும்புக் காப்புப் போட்டுச் சங்கிலியுடன் பிணைத்திருந்தார்கள். ஒரு நாள் கல்கியின் தாயும், சித்தியும் அவரைப் பார்க்க வந்திருந்தார்கள். கல்கியைக் கண்டவுடன் சித்தி;

''ஐயையோ, உன்னை இத்தக் கோலத்தில் பார்க்கத்தானா உன் அம்மா பெற்றுப் பாலூட்டி வளர்த்தார்?'' என்று அழத்தொடங்கி விட்டார். கல்கி உடனே சிரித்துக்கொண்டே;

''அம்மா நான் நகை போட்டுக்கொள்வதில்லை என்று நீ குறைபட்டாயல்லவா? இதோ என் காப்பும் சங்கிலியும் ..... '' என்றார்.

'ஜெயிலில் உனக்கு வழங்கப்படும் உணவு எப்படி?'' என்று அவர்கள் அக்கறையோடு கேட்டபோது, கல்கி இப்படிச் சொன்னார். ''அருமையான உணவு. மத்தியானம் குழம்பும் சாதமும், சாயங்காலம் சாதமும் குழம்பும், மறுநாள் குழம்பு கலந்த சாதம், அடுத்த நாள் முள்ளங்கிக் குழம்பு, சாயங்காலம் முள்ளங்கிக் கீரைக் குழம்பு, மறுநாள் முள்ளங்கித் தண்டுக் குழம்பு, அதற்கடுத்தநாள் முள்ளங்கி வாசனைக் குழம்பு ..'' சிறிது நிறுத்தினார். பின், ''அம்மா... முள்ளங்கி வாசனைக் குழம்பு என்றால் என்ன தெரியுமா? முள்ளங்கி, முள்ளங்கி என்று ஜபித்துச் செய்யும் குழம்பு'' என்று கூறி, மீண்டும் இடி இடியென்று சிரித்தார்.

— பிரவீண்கி

# புறாணை சென்ற இலங். யுவதிகள் கண்ணீர்க் கடலில் தவிக்கின்றனர்

இலங்கையில் இருந்து தொழில்வாய்ப்புப்பெற்றுபுறாணை நாட்டுக்குச் சென்ற சுமார் 300 பேர் போதிய சம்பள வசதி இன்றியும் உணவு வசதி இன்றியும் இருப்பிட வசதி இன்றியும் அவலப்படுகின்றனர்.

புறாணையில் உள்ள ஆடை தயாரிப்பு நிலையம் ஒன்றில் தொழில் பார்க்கச்சென்ற 300 பேரில் 250 பேர் பெண்கள்

இவர்கள் உணவு இருப்பிட வசதியின்றி அவதிப்படுவதோடு கைகளைக் கட்டி இழுக்கும் சித்திரவதைக்கும் உள்ளாவதாகத் தெரியவருகிறது.

## உதைபந்தாட்டப் போட்டி பாடுமீன் அணி வெற்றி

உரும்பிராய் சென்மைக்கல் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் தவிர்த்தல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில், நேற்று முன்தினம் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணிக்கும் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் பாடுமீன் அணி 2:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்ட ஆரம்ப முதல் வெகு விறுவிறுப்பாக இருந்த இப்போட்டியில் கொடுக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் போட்டு சமநிலையில் இருந்ததினால் 10 நிமிடம் மேலதிகமாகக் கொடுக்கப்பட்டது. அந்த நேரத்தில் பாடுமீன் அணி சாதுரியமாக ஆடி ஒரு கோலைப் போட்டு வெற்றி பெற்றது

நடுவராக எம். பிறான்சிசும் உதவி நடுவர்களாக எம்.எம். பிலேந்திரன், கே. நாகேந்திரன் ஆகியோரும் கடமையாற்றினார்கள். (16)

## பிரிவுதோறும் கிளைகள்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க செயற்பாடுகளை பன்முகப்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களை தாமதமின்றிக் கண்காணிக்கவும் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் கிளைகளை அங்குரார்ப்பணம் செய்து இயக்க வேண்டுமென இல.செ சங்க கிளிநொச்சி மாவட்ட கிளை ஆளுநர் குழு தீர்மானித்துள்ளது.

## இந்து இளைஞர் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம்

பண்டத்தரிப்பு பிரதேச இந்து இளைஞர் சங்கத்தின் புனரமைப்புப்பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது சைவசமயப் பெரியார்கள், நாயன்மார்கள் ஆகியோரின் குருபூசை தினங்களை சிறப்பாக கொண்டாடுவது என்றும், சமய வளர்ச்சிக்காக பாடுபடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு. சி. குணரத்தினம் தலைமை வகித்தார். கிராம சேவை அலுவலர்கள் திரு. சபா. நாராயணன், திரு. எஸ்.சுந்தரமூர்த்தி ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

புதுவருட நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது திரு.கோ.வாமதேவன் தலைவராகவும். திரு. வ. விஜேந்திரன் செயலாளராகவும், திரு. சு. சுகந்தன் பொருளாளராகவும் ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டனர். (13)

## வெள்ளோட்டம்

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் புதிதாகச் செய்யப்பட்ட சப்பற வெள்ளோட்ட விழா நாளை வியாழன் காலை 8.15 க்கு நடைபெறவுள்ளது. 24 ஆம் திகதி சனி தேர்த்திருவிழாவும் 25 ஞாயிறு தீர்த்தோற்சவமும் 26 திங்கள் பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (02)

## இலவசம்

பயன்மிகு இலவம் பருத்தி விதை தேவைப்படுவோர் முத்திரை ஒட்டி சுயவிலாசமிட்ட அஞ்சல் உறை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம் என மில்க்வைற் அதிபர் தெரிவிக்கிறார்.

## ஆயிரம் ரூபா கள்ள நோட்டு கிராம சேவையாளர் கைது

அம்பாந்தோட்டை மக்கள் வங்கிக்கிளையில் வைப்புக் கணக்கில் இடுவதற்காக கிராமசேவையாளர் கொண்டு சென்ற பத்தாயிரம் ரூபா பணத்தில் ஒரு ஆயிரம் ரூபா நோட்டு கள்ள நோட்டாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த கிராமசேவையாளர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்த கள்ள நோட்டில் A 11739447 என்ற இலக்கம் குறிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (06)

## சுவாமிநாதன் நியமனம்

யாழ் மாவட்டத் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளராக இலங்கை திட்டமிடல் சேவை சிரேஷ்ட அதிகாரி வி. செ. சுவாமிநாதன் நியமனம் செய்யப்பட்டு 1-8-91 இலிருந்து பதவியை பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த 5 வருடங்களுக்கு முன் யாழ் மாவட்ட திட்டமிடல் உதவிப் பணிப்பாளராக இவர் கடமையாற்றியிருந்தார். (11)

## கிராம சேவையாளர்களின் அலுவலகத் தினங்களில் மாற்றம்

நாட்டில் உள்ள சகல கிராமசேவை அலுவலர்களினதும் அலுவலகத் தினங்களாகத் திங்கட்கிழமையும் வியாழக்கிழமையும் நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளது என அரசாங்க நிருவாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு புதிய சுற்றறிக்கை ஒன்றின் மூலம் பிரகடனப்படுத்தியுள்ளது.

1991 கிராம உத்தியோகத்தர் தினப்புத்தகத்தின் 7 வது பந்தியில் கிராம சேவை உத்தியோகத்தர்களின் அலுவலக தினமாக திங்கட்கிழமையும் புதன்கிழமையும் ஒதுக்கப்பட்டிருந்தன.

பல காரணங்களைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டதன் பின் பொதுமக்களின் வசதிக்காகவே புதிய அலுவலகத் தினங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

## விஞ்ஞான விழா

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்து முகமாக அடுத்த மாதம் 26 ஆம் திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரியில் விஞ்ஞான நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளது.

இவ் விஞ்ஞான நிகழ்ச்சியில் விஞ்ஞானக் கருத்தரங்கு, விஞ்ஞான வினாவிடைப் போட்டி, விஞ்ஞானப் பேச்சுப் போட்டி என்பன நடாத்தப்படவுள்ளன.

இ போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் வைபவம் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள யாழ்ப்பாண விஞ்ஞான சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தின்போது இடம் பெறும். (11)

## அவசரக் கூட்டம்

பாடசாலைகளின் உடனடித் தேவைகள் பற்றியும், அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடுவதற்காக மருதனாமடம், தென்மராட்சி, வடமராட்சி கல்விக் கோட்ட பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர்களையும், பொருளாளர்களையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத அதிபர்களையும், கோட்ட ரீதியாக 22 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனாமடக்கல்விஅலுவலகத்திற்கும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரிக்கும், 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கும் சகலரையும் தவறாது வருகை தரும் வண்ணம்பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் வேண்டியுள்ளனர்.

## இன்று ஆரம்பம்

யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மீண்டும் 3 ஆம் தவணைக்காக இன்று புதன் கிழமை ஆரம்பமாகவுள்ளது. (44)

## நெல் விற்பனை

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சங்கக் கிளைகள் ஊடாக ஒரு கிலோ 19 ரூபா வீதம் நெல் விற்பனைசெய்துவருகின்றது.(13)

## பாலனென்றிருந்தேன்!

நல்லூர் கந்தசாமி கோவில் உள்வீதி. அடி அழித்துக் கொண்டு வீதியை வலம் வரும் தாயின் சேலைத் தலைப்பைப் பிடித்தபடி வந்தான் 3 வயதுப் பாலகன். அவன் பார்வை வேறொரு குழந்தையின் கையில் இருந்த பொருளில் நிலை குத்தி நின்றது.

''அம்மா நேக்கு அது வேணும்'' என்று தாயைச் சுரண்டினான். தாய் முருகனை வழிபடுவதில் கண்ணாயிருந்தாள். பாலகன் விடவில்லை ''நேக்கு வேணும்'' ராகம் தொடர்ந்தது தாய் கவனிக்கவில்லை. முன் வாசலுக்கு வந்ததும் மூகாரி ஒலித்தது. பாலகன் வெளியே கையைக் காட்டி ''நேக்கும் வேணும்'' என்று சொல்லி அழுதான்.

அவன் கண்ட பொருளை வைத்திருந்த சிறுவன் வெளியே போய்க் கொண்டிருந்தான்.

''சன வெக்கை அதுதான் அழுகிறான். வெளியே போவம்'' கணவன் சொன்னார்.

வெளியே வந்தனர் அழுகை நிற்கவில்லை, கடலைக் காரியிடம் போனார்கள். கடலையைத் திரும்பியும் பார்க்கவில்லை அவன். அழுகையும் ஓயவில்லை.

''தம்பிக்குப் பலூன் வாங்கிக் கொடுப்பம்'' என்றபடி வேறு கடைக்குப் போனார்கள்.

பொடியன் பலூனைத் திரும்பியும் பார்க்கவில்லை. ''நேக்கு வேணும்'' என்ற பல்லவியை விஸ்தாரமாகப் பாடலானான்.

''இவன் என்னதான் கேட்கிறான்'' என்று சலித்தார்கள்.

இந்த நேரம் கடைக்காரருக்குப் பொறி தட்டியது. கண்ணாடி அலுமாரியிலிருந்து ஒரு பொருளை எடுத்து நீட்டினார்.

அழுகை நின்றது. புன்முறுவல் தவழ்ந்தது. ஆசையுடன் அதை வாங்கி அரவணைத்தான் பொடியன். அது ஒரு பிளாஸ்ரிக் ஏ. கே. 47!

— முகுந்தன்

### சோவியத் குடியரசு தலைவர் யெல்ஸின் கோரிக்கை

## கொர்பசேவை வெளிநாட்டு மருத்துவக்குழு பரிசோதனை செய்யவேண்டும்

பதவி கவிழ்க்கப்பட்டுள்ள முன்னாள் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் வேறுநாடு ஒன்றிற்கு சென்றுவிட்டதாக ஊர்ஜிதமற்ற சில செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கொர்பசேவை இன்று தாம் சந்திக்க புதிய அரசு அனுமதிவழங்க வேண்டும் என குடியரசுகளில் ஒன்றான சோவியத் குடியரசின் தலைவர் யெல்ஸின் கேட்டுள்ளார்.

கொர்பசேவ் உடல்நலமில்லாமல் இருப்பதாக புதிய அரசு கூறுவதை சுட்டிக்காட்டிய அவர் அவரை வெளிநாட்டு மருத்துவர் குழு ஒன்று பரிசோதிக்க வேண்டும் எனவும் வைத்திய அறிக்கையில் அவர் உடல்நலம் திருப்தியாக இருந்தால் அவரை மீண்டும் ஆட்சியில் அமர்த்த வேண்டும் எனவும் யெல்ஸின் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இதனிடையே சோவியத் பாராளுமன்றத்தை பொரிஸ் யெல்ஸின் ஆதரவாளர்களும், யெல்ஸின் ஆதரவு இராணுவத்தினரும் சுற்றி நிற்கின்றனர் எனத்தெரிவிக்கப படுகிறது இவர்களைச் சூழ்ந்து புதிய அரசுக்கு ஆதரவான சோவியத் ராணுவம் டாங்கிகளுடன் நிலை கொண்டுள்ளது

இதேவேளை பிந்திக் கிடைத்த மற்றுமோர் தகவலின் படி கொர்பசேவ் விசேட இராணுவ விமானம் மூலம் மொஸ்கோ கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சோவியத்திற்கு எதிராக தற்போது பொருளாதாரத் தடையை ஐரோப்பியநாடுகள் கொண்டுவந்துள்ள இவ்வேளையில் கொர்பசேவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவர அமெரிக்கா முயற்சிக்கும் என ஜனாதிபதி புஷ் கூறியுள்ளார்.

## தற்காலிகமாக வசிப்பவர் பதிவு செய்வதில் குளறுபடி

மேல் மாகாணத்தில் தற்காலிகமாக வசிப்பவர்களை பதிவு செய்வதில் குளறுபடிகள் இடம் பெற்றதாக பாதுகாப்பு அமைச்சுக்கு புகார்கள் கிடைத்துள்ளன

பொலிஸார் இவ்விடயத்தில் தவறுகளை விட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் சில இடங்களில் நிரந்தரமாக வசிக்கும் சிங்களவர் முஸ்லிம்களின் விவரம் பொலிஸாரால் பதியப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

## லொறிகளில் வந்த உணவு நிவாரணத்துக்குப் போதாது

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு குமாரி கப்பலில் வந்த உலர் உணவுப் பொருள்கள் முள்ளி வாய்க்கால் இறங்குதுறையில் இறக்க முடியாமல் பருத்தித்துறை துறைமுகப் பகுதிக்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளது.

இராணுவத்தினரின் குண்டு வீச்சினால் முள்ளிவாய்க்கால் இறங்குதுறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாஜ்'கள் சேதமடைந்ததாலேயே உணவுப் பொருள்கள் இறக்க முடியாத அவலம் ஏற்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் ஒன்றே கால்இலட்சம் மக்கள் இருந்து வருகின்றனர். இவர்களுக்கு கடந்த ஒரு வருடத்தில் பத்து வீத உணவு மட்டுமே கடல் மார்க்கமாகவும் தரைமார்க்கமாகவும் எடுத்துவரப்பட்டுள்ளதாக செயலகவட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னர் இம்மாவட்டத்திற்கு இருபத்து இரண்டு லொறிகளில் உணவுப் பொருள்கள் எடுத்து வரப்பட்ட போதிலும் உலர் உணவு நிவாரணத்தைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் கட்டைக்காடு, இயக்கச்சி, கண்டாவளை முரசுமோட்டைப் பகுதியிலிருந்து ஆயிரத்து ஐந்நூறு குடும்பங்களும், திருமலையிலிருந்து ஆயிரம் குடும்பங்களும், மாங்குளம் பகுதி மற்றும் அயல் மாவட்டங்களிலிருந்தும் அகதிகளும் வந்து தங்கியுள்ளனர் (08)

### பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு

## 2000 ரூ, 4000 ரூ. நிவாரணம் வழங்க நடவடிக்கை

இடம் பெயர்ந்தவர்களுக்கான 2000 ரூபா நிவாரணமும், 4000 ரூபா உற்பத்தித் திறன் நன்கொடையும் மிக அண்மைக்கால அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கே முதலில் வழங்கப்படவிருக்கிறது.

அண்மையில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்துள்ள தெல்லிப்பழை, வேலணை, ஊர்காவற்றுறை, மருதங்கேணி, உதவி அரசாங்க அதிபர் பிரிவினைச் சேர்ந்தவர்களில் ஏற்கெனவே இக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குச் சிபார்சு செய்யப்பட்டவர்களுக்குஇவற்றைவழங்குவதற்கானநடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப் படுகின்றன.

இவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, ஏனைய உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளைச் சேர்ந்த. சிபார்சு செய்யப்பட்டு வழங்கப்படாதவர்களுக்கு கொடுப்பனவுகள் இடம் பெற விருப்பதாகவும் தெரிய வருகிறது. 25

## நிவாரண நிறுத்தம் பற்றி மட்டக்களப்பில் மாநாடு

முகாம்களிலுள்ள அகதிகளுக்கு மட்டுமே இனிமேல் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்ததை வாபஸ் பெறப்படவேண்டுமென மட்டக்களப்பு செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் கே. தர்மலிங்கம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இம்மாவட்டத்தில் வன்செயல்களால்தொழில் இழந்து பலர் உள்ளனர். பலர் வீடு வாசல்களை இழந்துள்ளனர். இவர்கள் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலேயே தங்கியுள்ளனர்.

இந் நிலையில் இவர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் நிறுத்துவது மனிதாபிமானமற்ற நடவடிக்கையாகும் என்றும் இதனால் மீண்டும் இவர்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அரசைக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

**சீர்உடைத் துணிகள் ஏல விற்பனை**

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தில் பின்வரும் சீர் உடைத் துணிகள் 1991 - 08 - 24 அன்று காலை 10 30 மணியளவில் ஏலத்தில் விற்கப் படும்.

1. வெள்ளை பொலியஸ்டர் 'சீனரக' சேட் துணி 800 மீற்றர்
2. வெள்ளை பொலியஸ்டர் காற்சட்டைத் துணி 500 மீற்றர்

ஏலத்தில் வெற்றி பெறுபவர் பொருள்களுக்கான முழுப்பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அப் பொருள்கள் அனைத்தையும் அன்று மாலை 4 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்தல் வேண்டும். துணிகளைப்பார்வையிட விரும்புபவர்கள் யாழ் பல்கலைக்கழக நிதிப்பிரிவில் அலுவலக நேரத்தில் பார்வையிட லாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

08119

சிவராஜன்...

வத்தினர் கூரை பகுதி மற்றும் பின்புறக் கதவு என்பவற்றை வெடிவைத்துதகர்த்து உள்ளே நுழைந்தனர்.

எனினும் இவர்கள் உள்ளே நுழைந்த போது வீட்டினுள் சிவராஜன் சுபா உட்பட எழுவரும் கைகோர்த்த நிலையில் இறந்து கிடந்தனர். இவர்களில் சிவராஜன் தன் நெற்றியில் கைத் துப்பாக்கி மூலம் சுட்டு தற்கொலை செய்திருந்தார் ஏனைய ஆறுபேரும் சயனைட் அருந்தி தற்கொலை செய்திருந்தனர்.

உள்ளே நுழைந்த படையினர் சிறிது நேரத்தில் பத்திரிகையாளர்கள் சடலங்களை பார்க்க அனுமதித்தனர்.

பின்னர் சடலங்கள் பங்களூர் பகுதியில் உள்ள ஓர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பலத்த பாதுகாப்பின் மத்தியில் வைக்கப் பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலைப் பட்டு மூன்று மாதங்களின் பின் இச் சம்பவம் நடந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ராணுவத்திற்கு...

அவர்களுக்கு எதிராக நடவடிக்கையும் வேறுவேறாக எடுக்க மாட்டாது எனவும் கூறியமை குறிப்பிடத்தக்கது.

சைக்கிள்...

சைக்கிள்கள் பல்கலைக்கழக ஊழியரதும் மாணவரதும் ஆகும்.

இனிமேல் பல்கலைக்கழகத்திற்குள் நுழையும் எல்லாச் சைக்கிள்களும் அனுமதி அட்டையினைப் பெற்றே உள்ளே வர வேண்டும் என அக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது இன்று முதல் இம்முறை நடைமுறைக்கு வருகிறது.

இதேவேளை - நேற்று முன் தினம் மேற்படி கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது சைக்கிள் ஒன்று களவாடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. 05

## இருவர் கொலை

கடந்த வாரம் அம்பாறையில் இரு குடும்பஸ்தர்கள் ஸ்ரீ லங்கா பொலிஸாராலும் சமூகவிரோதக் கும்பலினாலும் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

## சினைப்பர் தாக்குதல்

கீரிமலைப் பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் நேற்று மாலை மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் ஆர் வசந்தகுமார் (26) படுகாயமடைந்த நிலையில் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை தச்சன் காட்டுப் பகுதியில் உள்ள இராணுவத்தினரும் நேற்று மாலை ''சினைப்பர்'' தாக்குதலை மேற்கொண்டவண்ணம் இருந்தனர். 01

## யாழ் பெரியாஸ்பத்திரியில் ஒரே சூலில் மூன்று குழந்தைகள்

பண்டத்தரிப்பு காலையடி தெற்கு பன்னமுலை என்ற இடத்தைச் சேர்ந்த திருமதி ஸ்ரீகரன் துளசி என்ற பெண்மணி ஒரே சூலில் மூன்று குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

யாழ் பெரியாஸ்பத்திரியில் கடந்த வெள்ளிக்கிழமை இப் பெண்ணுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் பிறந்துள்ளன.

தாயும் சேய்களும் நலமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. 13

## கொப்பேகடுவவுக்கு உதவி கமாண்டர் நியமனம்

வடபகுதி இராணுவ நடவடிக்கைக்கு உதவி கமாண்டர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரிகேடியர் லக்கி அகலகம புதிதாக பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய இராணுவ நடவடிக்கைக்கு பொறுப்பாக இருக்கும் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவுக்கு உதவியாகவே இவர் நியமிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. 08

உயிருடன்...

தலைவர்களின் கொலை முயற்சி சம்பவங்களில் குற்றவாளிகள் பத்துசத வீதத்தினரே கண்டுபிடிக்கப்படுகின்றனர் என்றும், இதில் ஒரு சத வீதத்தினரே தண்டனைக்குள்ளாகின்றனர் எனவும் இந்திய வானொலி நேற்று சுட்டிக் காட்டியது.

## தேயிலை வீழ்ச்சி

கொழும்பில் கடந்த மாதம் நடைபெற்ற தேயிலை ஏல விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 21.08.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.